# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 166/ந/2026, நாள் 21 .09.2026

K. உதயகுமார்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, பூபதிநகர், எண்.131/90 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. உதயகுமார் என்பவரது 18.07.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.07.2025 அன்று பெறப்பட்டு, 166/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, பூபதிநகர், எண்.131/90 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. உதயகுமார் என்பவரின் 18.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"ஆற்காடு நகராட்சியில் 17.07.2025 அன்று செய்யார் பைபாஸ் ரோட்டில் தூய்மைப் பணி செய்து வரும் TN 73 AK 0605 என்ற எண் கொண்ட TATA ACE வாகனம் விபத்துக்குள்ளாகி ஓட்டுநருக்கு பலத்த காயம் ஏற்பட்டு, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட ஓட்டுநர் பணிபுரியும் சுய உதவி குழு மூலம் விபத்து காப்பீடு செய்யப்பட்டுள்ளதா? மற்றும் PF, ESI கட்டியுள்ளார்களா? அவர் எந்த சுய உதவி குழுவில் பணி புரிகிறார்? அவ்வாறு மேற்கண்ட சுய உதவி குழு PF மற்றும் ESI கட்டக்கூடிய தகுதியுடைய சுய உதவி குழுவா? மேலும், விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஓட்டுநருக்கு மருத்துவ செலவினங்கள் சுய உதவி குழு மூலம் செய்யப்படுமா? அல்லது நகராட்சி ஆணையாளர் அவர்கள் செலவினங்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்வாரா?.

தமிழ் நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.06.2022 அரசாணை எண் 116–ன் சுற்றிக்கையின் படி ஒவ்வொரு மாதமும் நகராட்சியில் தூய்மை பணி புரியும் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆகிய அனைவருக்கும் PF, ESI மற்றும் காப்பீடு தொகையினை கட்டி அதன் ரசீதை சமர்ப்பித்த பின்னரே நகராட்சியிலிருந்து பில் பட்டியல் தொகை அளிக்கப்பட வேண்டும். ஆனால் ஆற்காடு நகராட்சியில் ஏற்கனவே பணிபுரிந்த தனியார் ஒப்பந்த நிறுவனமான GREEN WARRIOR மற்றும் JP VINCIPLE நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் முறையாக PF, ESI

மற்றும் காப்பீடு செலுத்தவில்லை. இதன் பெயரில் OMBUDSMAN மன்றத்தில் புகார் மனு அளித்ததின் பெயரில், விசாரணை நடத்தி, அதற்கான உத்தரவாணை பிறப்பித்தும், ஆற்காடு நகராட்சியின் ஆணையாளர் திரு. வெங்கடலட்சுமணன் அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தற்போது இவ்வாறு விபத்து ஏற்பட்டுள்ளது. தூய்மைப் பணிபுரியும் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய PF, ESI மற்றும் காப்பீடு தொகையினை செலுத்திய பின்னரே, சுய உதவி குழுவிற்கோ நிறுவனத்திற்கோ பில் பட்டியல் தொகையினை வழங்க வேண்டுமென இதன் மூலம் கேட்டுக் கொள்கிறேன். தற்போது விபத்து ஏற்பட்டுள்ள ஓட்டுநர் ரியாஸ் அவர்கள் பணிபுரியும் சுய உதவி குழு, அவருக்கு முறையாக PF, ESI மற்றும் காப்பீடு செலுத்தவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு? நகர மன்ற தலைவரா? அல்லது நகராட்சி ஆணையாளரா? யார் காரணமாக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்து தூய்மை பணியாளர்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டுமென இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.''.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 26.02.2026 நாளிட்ட கடிதம் மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. ஆற்காடு நகராட்சி ஆணையரிடமிருந்து மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கை பெறப்படவில்லை.

4. இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் ஆகியோரை 07.08.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 08.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேற்படி அழைப்பாணையில் விசாரணைக்கு உரிய ஆவணங்கள் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராக நகராட்சி ஆணையரை அறிவுறுத்தப்பட்டது.

5. மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு உதவியாக திரு. சுரேஷ் ஆகியோர் 07.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"ஆற்காடு நகராட்சியில் தூய்மைப் பணி செய்து வந்த ரியாஸ் என்பவரின் பணிக்காலத்தில் வாகனம் விபத்துக்குள்ளாகி மேற்படி நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். ஆற்காடு நகராட்சியில் GREEN WARRIOR மற்றும் JP VINCIPLE நிறுவனம் காப்பீடு செய்யவில்லை மற்றும் EPF/ ESI தொகையும் பிடித்தம் செய்து கட்டவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். இதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை. மேலும் திரு. சிட்டிபாபு என்பவர் மேற்படி சுய உதவிக்குழுவில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இறந்து விட்டார். அவருக்கும் இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.116, நாள் 24.06.2022ன்படி நகராட்சியில் தூய்மைப் பணி புரியும் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆகியோருக்கு PF, ESI காப்பீடு தொகை செலுத்திய பின்னரே நகராட்சியில் பில் பட்டியல் தொகை தயாரித்து அளிக்கப்பட வேண்டும். விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள திரு. ரியாஸ் மற்றும் காலஞ்சென்ற திரு. சிட்டிபாபு ஆகியோருக்கு காப்பீடு செலுத்தப்படவில்லை எனில் அதற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

JP VINCIPLE நிறுவனம் திருத்தணி நகராட்சி, மேல்விஷாரம் நகராட்சிகள் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் தொடர்ந்து பணி செய்து வருகிறது. அதில் மொத்தம் 526 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஆனால் அந்நிறுவனம் கடந்த ஜூன் 2025ல் 126 நபர்களுக்கு மட்டுமே EPF/ ESI கட்டி உள்ளனர். மீதமுள்ள நபர்களுக்கு கட்டப்படவில்லை. மேலும் ஜூன் 2025 மாதத்தை தொடர்ந்து அதன் பின்னர் EPF/ ESI அனைத்து பணியாளர்களுக்கும் மேற்படி EPF/ ESI தொகை கட்டவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் .

எனவே, முறைகேடாக சுய உதவிக்குழு அமைத்து போலியாக பில் சமர்ப்பித்து EPF/ ESI கட்டாமல் நடத்தி வரும் நிறுவனத்திற்கும் அதற்கு உடந்தையாக செயல்படுகின்றவர்கள் மீது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறோம்.''.

6. எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.388/2026/எச்1 நாள் 05.08.2026–ல் அலுவலக பணிகள் நிமித்தமாக 07.08.2026 அன்று நடைபெறும் விசாரணையில் ஆணையாளர் அவர்களுக்கு பதிலாக நகராட்சி துப்புரவு அலுவலர் (பொ) திரு. க. சத்திய மூர்த்தி மற்றும் இளநிலை உதவியாளர் திரு. வெ. மணிகண்டன் ஆகியோரை விசாரணையில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திரு. க. சத்திய மூர்த்தி மற்றும் இருக்கை எழுத்தர் திரு. வெ. மணிகண்டன் ஆகியோர் 07.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்கள்.

"அரசாணை எண். (நிலை) 116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.08.2022–ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரி M/s.JP Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனத்திற்கு ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு 23.05.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் 01.06.2023 முதல் ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வெளிக்கொணர்வு முகமை (Outsourcing agency) EPF/ESI சரியான முறையில் கட்ட தவறிய காரணத்தால் பணி ஆணை ரத்து செய்து, மகளிர் சுய உதவிக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. வெளிக்கொணர்வு முகமை M/s.JP Vinciple, காஞ்சிபுரம் நிறுவனம் பணி செய்த காலத்தில் தற்காலிக ஒப்பந்த தூய்மை பணியாளர்களில், EPF/ESI விடுபட்ட பணியாளர்களுக்கு செலுத்த வெளிக்கொணர்வு முகமைக்கு மாதம் அளிக்கப்பட்ட தொகையில் EPF/ESI சரிபார்ப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்டு நகராட்சி கணக்கில் உள்ளது. EPF/ESI கணக்கிற்கு செலுத்த வெளிக்கொணர்வு முகமை M/s.JP Vinciple, காஞ்சிபுரம் நிறுவனத்திடம் வருகை பதிவேடு மற்றும் EPF/ESI செலுத்திய செலான்களை வழங்க தெரிவிக்கப்பட்டது. அந்நிறுவனத்திடமிருந்து விவரம் பெறப்பட்டு தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. ரியாஸ் என்பவர் தற்பொழுது உழைப்பு மகளிர் சுய உதவி குழுவில் வேலை செய்து வருகிறார். இக்குழு அரசு அங்கீகாரம் பெற்ற குழு என்பதால், திரு. ரியாஸ் அவர்களுக்கு (THADCO) தாட்கோ மூலமாக ரூ.46,000/– வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்பொழுது நகராட்சி பகுதியில் நல்ல முறையில் தூய்மை பணி சுய உதவிக் குழு மூலம் செய்யப்பட்டு அனைத்து சுய உதவிக் குழு பணியாளர்களுக்கும் EPF/ESI எண் பெறப்பட்டு, பிரதி

மாதம் தனியர்களின் கணக்கில் நகராட்சி மூலம் EPF/ESI தொகை செலுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.''.

7. மேலும், 07.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது விசாரணைக்கு ஆஜரான நகராட்சி துப்புரவு அலுவலர் (பொ) மற்றும் இருக்கை எழுத்தர் ஆகியோரால் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை கடிதம் ந.க.எண்.388/2026/எச், நாள் 05.08.2026 சமர்ப்பிக்கப்பட்டது. அதில்–

''அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.08.2022ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரி M/s.JP Vinciple காஞ்சிபுரம் என்ற நிறுவனத்திற்கு ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு 23.05.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. M/s.JP Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனம் 01.06.2023 முதல் ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின்படியும், வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்திடம் மேற்கொண்ட ஒப்பந்த நிபந்தனைகள்படியும், இந்நிறுவனம் 143 தூய்மைப்பணியாளர்களையும், 15 ஓட்டுனர்களையும் மற்றும் 7 துப்புரவு பணிமேற்பார்வையாளர்களையும் வழங்க வேண்டும். திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நியமனம் செய்யப்படும் ஒப்பந்ததாரருக்கு மாதாந்திர ஊதியப் பட்டியல் தொகை அரசால் நிர்ணயித்த KPI Norms படி வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்நிறுவனத்தால் தினந்தோறும் கையாளப்படும் குப்பைகளின் அளவுகோலை வைத்து பட்டியல் தொகை வழங்கப்பட்டது. மேலும் இப்பட்டியல் தொகையில் 50% பில் பட்டியல் சமர்ப்பித்தவுடன் சரிபார்த்து வழங்கப்பட்டது. மீதமுள்ள 50% தொகை வழங்கும் முன் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் அதாவது 80% Collection , 20% Segregation ஆகியவற்றை பரிசீலித்து துப்புரவு அலுவலர் அவர்களின் பரிந்துரையுடனும் பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI ஆகியவற்றை உறுதி செய்த பிறகு வழங்கப்பட்டது. இந்நிலையில் 50% தொகை முதலில் வழங்கப்பட்டும், மீதமுள்ள தொகையில் பணியாளர்களின் வருகை, வாகனங்களின் பயன்பாடு, பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI சரிபார்க்கப்பட்டு பணி குறைபாடுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, மீதி தொகை வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்த பட்டியல் சரிபார்த்து பிடித்தங்கள் போக மேற்படி நிறுவனத்தால் சமர்பிக்கப்பட்ட பட்டியல் தொகையில் 70% முதல் 80% தொகை மட்டும் வழங்கப்பட்டது. நிறுவனத்தால் நியமிக்கப்படும் பணியாளர்கள், தற்காலிக ஒப்பந்த பணியாளர்கள் ஆவர். EPF, ESI ஆகிய பிடித்தங்கள் செய்து சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பெயரில் செலுத்த வேண்டியது அந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

வெளிகொணர்வு முகமை (OUTSOURCING AGENCY) EPF / ESI சரியான முறையில் கட்ட தவறிய காரணத்தால் பணி ஆணை ரத்து செய்து, மகளிர் சுய உதவிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. வெளிக்கொணர்வு முகமை M/s.JP Vinciple, காஞ்சிபுரம் நிறுவனம் பணிசெய்த காலத்தில் தற்காலிக ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களில் EPF/ESI விடுப்பட்ட பணியாளர்களுக்கு செலுத்த வெளிகொணர்வு முகமைக்கு மாதம் அளிக்கப்பட்ட தொகையில் EPF / ESI சரிபார்ப்பு தொகை என ரூ.67,15,387/–யை பிடித்தம் செய்து நகராட்சி கணக்கில் உள்ளது. அத்தொகையை முறையாக EPF/ESI கணக்கிற்கு செலுத்த வெளிக்கொணர்வு முகமை

M/s.JP Vinciple, காஞ்சிபுரம் நிறுவனத்திடம் வருகை பதிவேடு மற்றும் EPF / ESI செலுத்திய செலான்களை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்திடம் இருந்து விவரம் அளிக்கப்படும்பட்சத்தில் தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கிவரும் TN 73 AK 0605 என்ற இலகுரக வாகனம் விபத்துக்குள்ளாகிய நிலையில், வாகனத்திற்கு விபத்து காப்பீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் பழுது நீக்கம் செய்யப்பட்டு (INSURANCE CLAIMED மூலமாக) –ஆக தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. திரு. ரியாஸ் அவர்கள் உழைப்பு மகளிர் சுய உதவி குழுவில் வேலை செய்து வருகிறார். இக்குழு அரசு அங்கீகாரம் பெற்ற குழு என்பதால் திரு. ரியாஸ் அவர்களுக்கு தட்கோ மூலமாக ரூ.46,000/– கடன் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சி பகுதியில் நல்ல முறையில் தூய்மை பணி சுய உவிக்குழு மூலம் செய்யப்பட்டு, அனைத்து சுய உதவிக்குழு பணியாளர்களுக்கும் EPF/ESI எண் பெறப்பட்டு பிரதிமாதம் தனியர்களின் கணக்கில் நகராட்சி மூலம் EPF/ESI தொகை செலுத்தப்பட்டு வருகிறது என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.". எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி துப்புரவு அலுவலர், இருக்கை எழுத்தர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

ஆற்காடு நகராட்சி வாகனம் TATA ACE எண் TN 73 AK 0605 விபத்துக்குள்ளானதில், தூய்மைப் பணி மேற்கொள்ளும் ஓட்டுநர் திரு. ரியாஸ் என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பதும், விபத்துக்குள்ளான ஓட்டுநர் பணிபுரியும் சுய உதவி குழு விவரம், அன்னாருக்கு காப்பீடு மற்றும் PF, ESI தொகை, யாரால் செலுத்தப்படுகிறது, மருத்துவ செலவினங்கள் எவ்வாறு ஈடுகட்டப்பட்டது போன்ற விவரங்களை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், சுய உதவி குழு மூலம் பணியாற்றி, பணிக்காலத்தில் இறந்த திரு. சிட்டிபாபு என்பவருக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை என்பதும், நகராட்சியில் தூய்மைப் பணி புரியும் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு EPF, ESI மற்றும் காப்பீடு தொகை போன்றவை செலுத்திய பின்னரே, பில் பட்டியல் தொகை தயாரித்து வழங்கப்பட வேண்டும் என்பதும், ஒப்பந்தப்பணி மேற்கொண்ட GREEN WARRIOR மற்றும் JP VINCIPLE ஆகிய தனியார் நிறுவனங்கள் பணியாளர்களுக்கான PF, ESI மற்றும் காப்பீடு தொகை முறையாக செலுத்தாதது குறித்து பெறப்பட்ட புகார் மனுமீது முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை நகராட்சி ஆணையரால் செயல்படுத்தவில்லை என்பதும், திருத்தணி நகராட்சி, மேல்விஷாரம் நகராட்சி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் பணி மேற்கொண்டுவரும் JP VINCIPLE நிறுவனம், 526 பணியாளர்களில் 126 நபர்களுக்கு மட்டுமே ஜுன் 2025 வரை EPF/ ESI செலுத்தப்பட்டுள்ளது என்பதும், அதன் பின்னர் அனைத்து பணியாளர்களுக்கும் EPF/ ESI தொகை செலுத்தப்படவில்லை என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

ஆற்காடு நகராட்சியில் தூய்மைப்பணி மேற்கொண்டு வந்த M/s.JP Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனம் பணியாளர்களுக்கான EPF/ESI கட்ட தவறியதாக பெறப்பட்ட புகாரை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தின் பணி ஆணை ரத்து செய்யப்பட்டு, உழைப்பு மகளிர் சுய உதவிக்குழுவிற்கு மேற்படி பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதும், உழைப்பு மகளிர் சுய உதவிக் குழு மூலம் நகராட்சி பகுதிகளில் தூய்மை பணி நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், உழைப்பு மகளிர் சுய உதவி குழு மூலம் தூய்மைப் பணியாற்றி வந்த ஓட்டுநர் திரு. ரியாஸ் என்பவர் வாகனம் விபத்துக்குள்ளானதால், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், திரு. ரியாஸ்

என்பவருக்கு தாட்கோ (THADCO) மூலம் ரூ.46,000/– கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதும், சுய உதவிக் குழு மூலம் பணியாற்றி வரும் அனைத்து பணியாளர்களுக்கும் EPF/ESI எண்கள் பெறப்பட்டு, பிரதி மாதம் தனியர்களின் கணக்கில் தொகை செலுத்தப்பட்டு வருகிறது என்பதும் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் இருக்கை எழுத்தர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

அரசாணை எண். (நிலை) 116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.08.2022–ன்படி ஆற்காடு நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு M/s.JP Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனத்திற்கு தூய்மைப் பணி மேற்கொள்வதற்கு 23.05.2023 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, 01.06.2023 முதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்படி நிறுவனம் மேற்கொண்டனர் என்பதும், மேற்படி நிறுவனம் தனது பணியாளர்களுக்கு சரியான முறையில் EPF/ESI கட்ட தவறியதால் பணி ஆணை ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதும், M/s.JP Vinciple நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் EPF/ESI சரிபார்ப்புக்கென பிடித்தம் செய்யப்பட்ட தொகை நகராட்சி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்பதும், M/s.JP Vinciple நிறுவனம் மூலம் பணிமேற்கொண்ட பணியாளர்களின் வருகை பதிவேடு, அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட EPF/ESI விவரம் மற்றும் அதற்கான செலான்கள் அளிக்குமாறு நகராட்சியால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், M/s.JP Vinciple நிறுவனம் மேற்படி விவரங்களை அளிக்கும்பட்சத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை விடுவிக்கப்படும் என்பதும் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் இருக்கை எழுத்தர் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்,

1) மனுதாரர் ஆற்காடு நகராட்சி மீதான புகாருடன், திருத்தணி நகராட்சி, மேல்விஷாரம் நகராட்சி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சிகளில் M/s.JP Vinciple நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து புகார்கள் அளித்திருப்பது ஏற்படையதல்ல. 2015–ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில், விதி–4, 5 மற்றும் 6ன் படி திருத்தணி நகராட்சி, மேல்விஷாரம் நகராட்சி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி ஆகி அமைப்புகளில் M/s.JP Vinciple நிறுவனத்தின் மீதான புகார்கள் குறித்து தனித்தனியே மனு அளித்து நிவாரணம் பெற்றுக் கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2) M/s.JP Vinciple நிறுவனம் ஆற்காடு நகராட்சியில் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வந்த நிலையில், தனது பணியாளர்களுக்கு சரியான முறையில் EPF/ESI தொகை பணியாளர்களின் கணக்கில் செலுத்துவதில்லை என்ற புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தின் 29.05.2025 நாளிட்ட ஆணை எண். 203/ந/2024 வெளியிடப்பட்டது. மேற்படி ஆணையினை தொடர்ந்து தணிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கை ந.க. எண். LFAD/e1089757/நத(1)/2025, நாள் 24.07.2025 பெறப்பட்டுள்ளது. மேற்படி தணிக்கை அறிக்கையில் பணியாளர்களின் கணக்கில் EPF/ESI 'தொகை செலுத்தாததால், M/s.JP Vinciple நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதனில் சிறப்பு கவனம் செலுத்தி M/s.JP Vinciple நிறுவனத்தில் பணியாற்றிய பணியாளர்களுக்கான EPF/ESI தொகை செலுத்தப்பட்டதற்கான விவரம் பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆற்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

3) மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் காப்பீடு திட்டத்தில் இணைந்துள்ளனரா, பணி மேற்கொள்ளும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு EPF/ESI கணக்கு தொடங்கப்பட்டுள்ளதா என்பதையும், மேற்படி காப்பீட்டின் நிலை குறித்து நகராட்சி ஆணையர் முதன்மை பணி வழங்குபவர் (Principal Employer) என்ற நிலையில் எவ்வித புகார்களுக்கும் இடம் கொடுக்காதவாறு அவ்வப்போது ஆய்வு செய்து பணி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆற்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 21–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. K. உதயகுமார்,
எண்.131/90, பூபதிநகர்,
ஆற்காடு–632 503,
இராணிப்பேட்டை மாவட்டம்,

2. நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம், வேலூர்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.